**O.S. No. 85 /2014**

**Date:02.03 .2026**

**வா.சா. 3 மாரியம்மாள்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு சொந்த ஊர் ரெட்டியப்பட்டி. இந்த வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் எதற்காக நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால் பிரதிவாதி மீது வழக்கு உள்ளதாக கூறி வாதி என்னை அழைத்து வந்தார். ஜெயலட்சுமி என்பவர் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளவர் என்றால் சரியல்ல. பிரதிவாதி ஜெயலட்சுமி என்பவர் வாதி செல்வராஜ் என்பவர் வீட்டில் வைத்து 2011 ல் என்னை வைத்துக்கொண்டு பணம் கேட்டார். வாதி ரூ.7,00,000/-ஐ பிரதிவாதிக்கு கொடுத்தார். 1000 ரூபாய் நோட்டுக்களாக கொடுத்தார். கடனுறுதி சீட்டை எழுதியவர் யார் என்று பெயர் தெரியாது . கடனுறுதிச் சீட்டை டைப் அடித்துக்கொண்டு வந்து பின்னர் எழுதினார்கள். பிரதிவாதி மேற்படி கடனுறுதிச் சீட்டில் எத்தனை கையெழுத்து செய்தார் என்றால் ஒரு ஸ்டாம்பில் கைரேகை செய்தார். மேற்படி கடனுறுதி ச் சீட்டில் முதல் சாட்சி கையெழுத்து யார் செய்தார் என்றால் ஜெயலட்சுமி என்பர் தான் கைரேகை செய்தார். பின்னர் செல்லையா கையொப்பம் செய்தார். அதன் பின்னர் நான் கையெழுத்து செய்தேன். எனது ஊர் மற்றும் எனது கணவர் பெயரை நான் தான் எழுதினேன். கடனுறுதிச் சீட்டில் கண்ட வாசகங்களும், எழுதியது என்று கையொப்பம் செய்ததும் ஒரே எழுத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். கரிவலம் வந்த நல்லூரில் பத்திர எழுத்தர் உள்ளார்கள் என்றால் உள்ளார்கள். கரிவலம் ஊருக்கும் ரெட்டியப்பட்டிக்கும் எவ்வளவு தூரம் என்றால் 3 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். ரெட்டியப்பட்டிக்கும் சங்கரன்கோவிலுக்கும் எவ்வளவு தூரம் என்றால் 10 மைல் தூரம் இருக்கும்.கரிவலதில் பத்திர எழுத்தர் உள்ள நிலையில் சங்ரன்கோவிலில் இருந்து பத்திர எழுத்தரை அழைத்துக்கொண்டு சென்றதற்கான காரணம் தெரியாது. வாதி செல்வராஜ் எனது தம்பி உறவு முறை ஆகும். முன்னாள்

பஞ்சாயத்து தலைவர் ராஜகுரு என்ன உறவு முறை என்றால் தம்பி உறவு முறை ஆகும். பிரதிவாதி ஜெயலட்சுமி தான் என்ன செய்வது என்ற நிலையில் இருக்கும் போது நானும். வாதியும், ராஜகுரு என்பவர்களும் சேர்ந்து வா.சா.ஆ. 1 கடனுறுதிச் சீட்டை உற்பத்தி செய்தோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாதியிடம் எந்த காலத்திலும் பணம் வாங்கவில்லை என்றாலும், அதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க கோரி வாதி செல்வராஜ் தான் அழைத்து வந்தார் என்று சொன்னால் சரிதான். எனக்கும், பிரதிவாதிக்கும் பேச்சுவார்த்தை என்பது கிடையாது என்றாலும், எங்களுக்குள் நிரந்தர பகை உண்டு என்றாலும் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Sd/-P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.